நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

**சி.சி 133/2019**

**2022ம் ஆண்டு ஜுலை மாதம் 28ம்** நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா. 3**வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | நாச்சி | வயது: | 32 |
| த/பெ.(அ)க.பெ | பழனி | தொழில்: | விவசாய கூலி |
| ஊர் : | பெருமாபள்ளி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் பெருமாபள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 பழனி எனது கணவர். அ.சா.2 பரமேஸ்வரி எனது மாமியார். 4ம் எதிரி குப்பம்மாள் என் மாமனார் பொன்னனின் 2வது மனைவி.மேற்படி எதிரிகள் மோகனும், மாதவனும் மேற்படி குப்பம்மாளின் பிள்ளைகள்.எங்களுக்கும், எதிரிகளுக்கும் மேற்படி என் மாமனார் பொன்னனுக்கு உரிமையான சொத்து சம்மந்தமாக நிலத்தகராறு இருந்துவருகிறது.

இந்நிலையில் கடந்த 18.11.2016 அன்று காலை 8.00 மணியளவில் என்னுடைய கணவர் பழனி எங்களுக்கு சொந்தமான இடத்தை டிராக்டர் வைத்து கொண்டிருந்தார். அப்போது என் மாமனார் பொன்னன், ஆஜர் எதிரிகள் மூவரும் அந்த இடத்திற்கு தடி, கத்தி ஆகியவற்றை கொண்டு வந்து அதில் 1ம் எதிரி மோகன் என் கணவரை கத்தியால் தலையில் வெட்டினார். 2ம் எதிரி மாதவன் தடியால் என் கணவரை இடதுபக்கம் கை மற்றும் முழங்காலில் அடித்தார். அப்போது 4ம் எதிரி குப்பம்மாள் தடியால் உடம்பு முழுவதும் என் கணவரை அடித்தார். அப்போது மேற்படி சம்பவத்தை சுப்பிரமணி மற்றும் தங்கராஜ் ஆகியோர் விலக்கிவிட்டு ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார்கள். பின்னர் ஆம்புலன்ஸில் அடிப்பட்ட என் கணவரை ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ஆம்புலன்ஸில் ஏறும் போது எதிரி மோகன், மாதவன் ஆகியோர் என் கணவரை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். அடிப்பட்ட என் கணவரை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து அட்மிட் செய்தோம். போலீஸார் சம்பவம் சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

எ.த.கு.வி:-

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு திருமணமாகி 18 வருடங்கள் ஆகிறது. எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். பெரியவன் 12ம் வகுப்பும், சிறியவன் 11ம் வகுப்பும் படிக்கிறார்கள். என் மாமியார் என் திருமணத்தின் போது கோவிந்தன் என்பவரோடு வாழ்ந்து வந்தார் என்றால் இல்லை. என் மாமியார் கடந்த 35 ஆண்டுகளாக மேற்படி கோவிந்தன் என்ற நபரோடு தான் வாழ்ந்து வருகிறார் என்றால் இல்லை. மேற்படி சம்பவம் நடக்கும் போது யாருமே இல்லை முடியும் தருவாயில் தான் தங்கராஜிம், சுப்பிரமணியும் வந்து விலக்கினார்கள். அப்போது அவர்கள தடியும் கத்தியும் பிடிங்கி போட்டார்கள். மோகனிடமிருந்து கத்தியையும் மாதவனிடமிருந்து தடியையும் பிடிங்கி போட்டார்கள்.

ஆம்புலன்ஸ் 10.00 மணியளவில் வந்திருக்கும். ஆம்புலன்ஸில் என் கணவரை வீட்டிலிருந்துதான் ஏற்றி சென்றோம். ஆம்புலன்ஸில் நான், என் மாமியார், சென்றோம். மேற்படி சம்பவத்தினமன்று டிராக்டர் ஓட்டியதாக சொல்லப்படும் நபர் பெயர் தெரியாது. என் மாமியாருக்கும், குப்பம்மாளுக்கும் 10 ஆண்டுகளாக நிலம் சம்மந்தமான வழக்கு நடந்துவருகிறது. என் மாமியார்தான் குப்பம்மாள் மீது வழக்கு போட்டுள்ளார். என் கணவரும் என் மாமியாரும் சேர்ந்துதான் குப்பம்மாள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

என் கணவரின் அப்பா பொன்னன்தான் என்று என் மாமியார் சொல்லிதான் தெரியுமா என்றால் இல்லை நான் அதே ஊர் என்பதால் எனக்கு நன்றாக தெரியும். 1, 2 எதிரிகளின் சகோதரிகள் 2 பேர். அவர்கள் பெயர் அற்புதம், உமாபதி.அற்புதம் எனது கணவரை விட பெரியவர் என்றால் இருக்கலாம். உமாபதி என் கணவரைவிட பெரியவர் என்றால் இல்லை சிறியவர்.

என் கணவர் மருத்துவமனையில் ஒருவாரம் இருந்தார். அப்போது போலீஸார் என் கணவரை விசாரித்தார்கள். அப்போது நான் உடன் இருந்தேன். அப்போது என்னையும், என் கணவரையும் விசாரித்தார்கள். நான் 7 நாளும், என் கணவருடன் மருத்துவமனையில் தான் இருந்தேன்.

என் மாமியார் பரமேஸ்வரி குப்பம்மாளுக்கு எதிராக தாக்கல் செய்தவழக்கு ஏற்கனவே 2008-ல் தள்ளுபடி ஆகிவிட்டதாலும், தற்போது அதே சங்கதிகளை கொண்டு என் கணவர் புதுவழக்கை தாக்கல் செய்வதற்காக ஒரு காரண காரியத்தை தோற்றுவிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் இந்த புகாரினை எதிரிகள் மீது கொடுத்துள்ளார் என்றால் இல்லை. நாங்கள் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும்

நடைபெறவில்லை என்றாலும், மேற்படி எதிரிகளுக்கு அவர் தந்தை பொன்னன் மூலமாக பாத்தியப்பட்ட சட்டப்படியான சொத்தை அபகரிக்கும் நோக்குடன் இந்த வழக்கை பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தொடுத்துள்ளேன் என்றால் இல்லை.

கட்டையன் வீட்டார் என்பவர் எங்கள் ஊரில் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களை எனக்கு தெரியும். சம்பவம் நடந்த இடம் எங்களுக்கு சொந்தமானது தான் என்பதற்கு ஆவணத்தை அவர்களிடம் கொடுத்திருந்தோம். என் மாமியார்தான் கொடுத்தார் அது எனக்கு நேரடையாக தெரியாது. 03.07.2005 அன்று என் மகன் பிறந்தார். ஏன் கணருக்காகவும், என் மாமியாருக்காகவும், போலீஸார் சொல்லிக்கொடுத்தப்படி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

ம.வி:- இல்லை.

<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

**<u>சி.சி 133/2019</u>**

**2022ம் ஆண்டு ஜூலை மாதம் 28ம்** நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா. 4**வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | சுப்பிரமணி | வயது: | 63 |
| த/பெ.(அ)க.பெ | ராமசாமி | தொழில்: | விவசாயம் |
| ஊர் : | பெரும்பள்ளி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் பெருமாபள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்கிறேன். அ.சா.1 பழனி எனது மருமகன். அ.சா.2 பரமேஸ்வரி எனது சம்மந்தி. அ.சா.3 எனது மகள். 4ம் எதிரி குப்பம்மாள் என் சம்மந்தி பொன்னனின் 2வது மனைவி.மேற்படி எதிரிகள் மோகனும், மாதவனும் மேற்படி குப்பம்மாள் மற்றும் பொன்னனின் பிள்ளைகள்.18.11.2016 அன்று நான் காலை 8.00 மணியளவில் என் நிலத்திற்கு செல்வதற்காக என் மாப்பிள்ளை நிலத்தை கடந்து சென்று கொண்டிருந்த போது மோகன் கத்தியால் பழனியை வெட்டியுள்ளார். அப்போது மாதவன் தடியால் இடது கையில் பழனியை அடித்துள்ளார். அப்போது குப்பம்மாள் தடியால் பழனியை அடித்துள்ளார். அப்போது நானும், தங்கராஜூம் சென்று தடியையும் கத்தியையும் பிடிங்கி சண்டையை நிறுத்தினோம். மேற்படி எதிரிகள் அடித்ததால் பழனிக்கு ரத்தகாயம் அதிகமாக இருந்தது. பிறகு ஆம்புலன்ஸிற்கு போன் செய்து வரவழைத்து பழனியை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்தோம். போலீஸார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

எ.த.கு.வி:-

நான் தாலுக்கா காவல் நிலையத்திற்கு சம்பவம் நடந்த மறுநாள் சென்றேன். அங்குதான் நான் கையெழுத்து போட்டேன். மருமகன் பழனிக்கு சட்டையெல்லாம் ரத்தகாயம் இருந்தது. ஆம்புலன்ஸ் 1/2 மணிநேரத்தில் வந்தது. 9.00 மணிக்கு வந்தது. அப்போது நாங்கள் நிலத்திற்கு பக்கத்திலேயே உள்ள வீதியிலேயே பழனியை வைத்திருந்தோம். எங்கள் ஊரில் மருத்துவ வசதிஇல்லை.எங்கள் ஊரில் ஏதோ ஒருநாள் மருத்துவர் அங்கு வருவார். நாங்கள்

பழனிக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் ரத்த காயத்திற்கு ஊரிலேயே கட்டு போட்டோமா என்றால் இல்லை. முதலுதவி கூட செய்யவில்லை. அதிகவெட்டு என்பதால் மஞ்சள்தூள் கூட வைக்கவில்லை.

எனக்கு 63 வயதாகிறது. எனது சம்மந்தி பரமேஸ்வரிக்கு 15 வயது என்னை விட குறைவாக இருக்கும். அவர் பொன்னனின் அக்கா மகள். பொன்னனுக்கு மேற்படி பரமேஸ்வரியை சிறுவயதிலேயே திருமணம் செய்துவிட்டார்களா என்றால் 16 வயதில் திருமணம் செய்திருப்பார்கள். பரமேஸ்வரி கோவிந்தன் என்பவருடன் பொன்னனை விட்டுவிட்டு வாழ்ந்து வந்தார்கள் என்றால் இல்லை.

எங்கள் ஊரில் ஆட்டுக்கார பெருமாள் என்பவர் உள்ளார் என்றால் சரிதான். 25 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி ஆட்டுக்கார பெருமாள் மீது பரமேஸ்வரியும், கோவிந்தனும் சேர்ந்து ஒரு வழக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான், அவர்களுடைய கடை அருகே வந்து சண்டை போட்டதால் கொடுத்தார். அந்த வழக்கில் பரமேஸ்வரியும், கோவிந்தனும் ஒரே வீட்டில் வசித்ததால் தான் ஒன்றாக சேர்ந்து வழக்கு கொடுத்தார்கள் என்றால் இல்லை, அது கடசெலவு எடுத்துசெல்லும் போது நடந்த சம்பவம்.

கோவிந்தனும், பரமேஸ்வரியும் ஒன்றாக வாழ்வது எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், எனக்கே தெரிந்த காரணத்திற்காக அதை நீதிமன்றத்தில் மறைக்கிறேன் என்றால் இல்லை. நாங்கள் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், மேற்படி எதிரிகளுக்கு அவர் தந்தை பொன்னன் மூலமாக பாத்தியப்பட்ட சட்டப்படியான சொத்தை அபகரிக்கும் நோக்குடன் இந்த வழக்கை பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் பழனி தொடுத்துள்ளார் என்றால் இல்லை.

பரமேஸ்வரி பொன்னன் மீது வழக்கு தொடுததார் என்றால் சரிதான். அந்த வழக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. 2வதாக பழனி அவர்கள் மீது வழக்கு போட்டது தெரியும், அது 2016 ஆண்டு என்றால் சரிதான். பழனி மேற்படி அவர் ஓட்டிய நிலத்தில் தகராறு செய்ததால் சொத்து எனக்குதான் சொந்தமென்று மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி என் மருமகன் தாக்கல் செய்த சிவில் வழக்கில் காரண காரியம் ஏற்படுத்துவதற்காக இவ்வழக்கு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை.

நாங்கள் மோகன், மாதவன் வைத்திருந்த தடியையும், கத்தியையும், பிடிங்கி நிலத்திலேயே போட்டுவிட்டோம். எதற்காக சண்டை போடுகிறீர்கள் என்று

திட்டினோம் ஆனால் அடிக்கவில்லை. என் மருமகன் இந்த வழக்கில் பிகார்தாரர் என்பதால் அவருக்காக போலீஸார் சொல்லிக்கொடுத்தப்படி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

ம.வி:- இல்லை.